செ.வெ.எண்: 18/மார்ச் நாள்: 09.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சேதுபதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக மாணவ, மாணவியர்களிடம் கையெழுத்தினை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு படிவம் 6-இனை புதிய வாக்காளர்களிடம் பெற்றார்.

இராமநாதபுரம் சேதுபதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (09.03.2016) வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலினை முன்னிட்டு 18 வயது நிரம்பிய கல்லூரி மாணவ, மாணவியர்களிடம் புதிய வாக்காளர்களை தேர்தல் பட்டியலில் சேர்ப்பதற்காக படிவம் 6 -இனை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பெற்றுக் கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான கையெழுத்தினை மாணவ, மாணவியர்களிடம் பெற்றுக் கொண்டார்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் உங்கள் பெற்றோர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் வாக்களிப்பதன் அவசியத்தை எடுத்துரைத்திட வேண்டும். இந்திய குடிமக்களாகிய நாம் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், பல்வேறு பணிகள் இருப்பின் அவற்றிற்கெல்லாம் சற்று அவகாசம் எடுத்து அன்று ஒரு நாள் கட்டாயம் வாக்களிப்பது நமது கடமை என்ற இலட்சிய உணர்வுடன் வாக்களிக்க முன் வர வேண்டும். படித்த மாணவச் செல்வங்களாகிய நீங்கள் வாக்களிப்பதன் அவசியத்தை பலதரப்பட்ட மக்களுக்கு எடுத்துரைக்கும் போது படிக்காத பாமர மக்களும் நன்கு அறிந்து, புரிந்து கொண்டு வாக்களிக்க முன்வருவார்கள். 18 வயது நிரம்பியவர்கள் அனைவரும் வாக்காளர்களாக இடம் பெற வேண்டும். அவ்வாறு இது வரை இடம் பெறாதவர்கள் படிவம் 6-இனை பூர்த்தி செய்து உடனடியாக தங்களை வாக்காளராக சேர்த்திட உறுதிப்படுத்திட வேண்டும். படிவம் 6-இனை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஜனநாயகம் தழைக்க வலுவான ஜனநாயகத்திற்கு "வாக்குரிமை நமது நாட்டுரிமை", "எனது வாக்கு என் எதிர்காலம்", "வாக்களித்தல் நமது உரிமை", என்ற நோக்குடன் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் உங்களை தயார்படுத்தி கொள்வது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் தயார் படுத்திட முன் வர வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்வில் சேதுபதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.சின்னய்யா, இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி, துணை வட்டாட்சியர்கள் திரு.பழனி, திரு.கார்த்திகேயன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**